**IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, GANDARVAKOTTAI**
**(CHAPTER XXIII BNSS)**

**<u>CC.NO- 134/2023</u>**

**Dated :17.02.2026**

**Deposition of witness for : P.W.5**

**List of Witness LW13 Examined as PW5 (IO)**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | **செந்தில்மாறன்** | வயது | : | 52 |
| தந்தை பெயர் | : | **அமிர்தலிங்கம்** | தாலுகா | : | புதுக்கோட்டை |
| கிராமம் | : | ஆதனக்கோட்டை | தொழில் | : | காவல் ஆய்வாளர் |

Solemly affirmed by Tmt. Vijayalakshmi, Junior Assistant of this court in accordance with the provisions of Act X of 1873.

**Counsel present.**

**As per the Circular of the Hon'ble High Court, Madras in ROC.No.74663/2025/F1. DATED 21.02.2025 the identify of the witness verified with their identity card.**

**Aadhar Card of the Witness verified.**

(எதிரி ஆஜர்)

**<u>முதல் விசாரணை</u>**

1) நான் தற்போது ஆதனக்கோட்டை காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். நான் கடந்த 23.07.2021 ஆம் தேதியன்று, கந்தர்வக்கோட்டை வட்ட காவல் ஆய்வாளராக நிலைய பொறுப்பில் இருந்த போது, கந்தர்வக்கோட்டை காவல் நிலைய நிலைய குற்ற எண் 171/2021 சட்டப்பிரிவு 304-A இதச வழக்கில் கந்தர்வக்கோட்டை காவல் நிலைய உதவி ஆய்வாளர் சுந்தரமூர்த்தி என்பவரால் புகார் மனு பெறப்பட்டு, வழக்கு பதிவு செய்யப்பட்டு,காவல் ஆய்வாளர் ஞானவேலன் என்பவர் முதல் புலன் விசாரணை முடித்து, அவருக்கு பணிமாறுதல் வந்துவிட்டதால், மேல்விசாரணைக்காக எனது பார்வைக்கு வைத்தார். நான் வழக்கினை விசாரணைக்கு எடுத்துக்கொண்டு சம்பவ இடம் சென்று பார்வையிட்டதில், காவல் ஆய்வாளர் தயார் செய்திருந்த பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் சரியாக இருந்ததால், நான் தனியாக தயார் செய்யவில்லை. காவல் ஆய்வாளர் விசாரணை செய்த சாட்சிகளை விசாரித்த போது, அவர்கள் காவல் ஆய்வாளரிடம் சொன்ன அதே வாக்குமூலத்தை என்னிடம் கூறியதால் நான் தனியாக வாக்குமூலம் பதிவு செய்யவில்லை.

**2)** பின்னர் 13.08.2021 ஆம் தேதி, புதுக்கோட்டை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை சென்று, இவ்வழக்கு விபத்தில் இறந்து போன மணிமாறன் என்பவரின் பிரேதத்தினை பிரேத பரிசோதனை செய்த மருத்துவர் வள்ளியப்பன் என்பவரை விசாரணை

செய்து, வாக்குமூலம் பதிவு செய்து, பிரேத பரிசோதனை அறிக்கை பெற்று வந்தேன். **( மேற்படி பிரேத பரிசோதனை அறிக்கை அ.சா.ஆ. 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** ( மேற்படி அ.சா.ஆ.3 ஆவணத்தை இந்த சாட்சி மூலமாக குறியீடு செய்வதற்கு எதிரி தரப்பில் ஆட்சேபணை தெரிவிக்கவில்லை என்பதால் BNSS பிரிவு 330(3)-இன் கீழ் மேற்படி ஆவணம் இந்த சாட்சியின் மூலமாக குறியீடு செய்யப்படுகிறது. )

**4)** பின்னர் இத்துடன் விசாரணை முடித்து வழக்கு கோப்பினை பார்வையிட்டு எதிரிக்கு எதிராக இதச பிரிவு **304( A)–**ன் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:</u>**

1) வழக்கு சம்பவம் 24.03.2021 ஆம் தேதி நடைபெற்றது என்றாலும் நான் வழக்கு கோப்பினை 23.07.2021 ஆம் தேதி விசாரணைக்கு எடுத்துக்கொண்டேன் என்றாலும் சரிதான், அன்றைய தினம் தான், நான் காவல் ஆய்வாளராக பொறுப்பேற்றுக்கொண்டேன். வழக்கு சம்மந்தமான ஆவணங்களை நான் பார்வையிட்டேனா என்றால் பார்வையிட்டேன். நான் இவ்வழக்கினை முறையாக புலன் விசாரணை செய்யாமல் குறைபாடு உடைய குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்து, அதற்கு அனுசரணையாக உண்மைக்கு பு றம்பாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை– இல்லை**

**சாட்சியின் கையொப்பம்**

**திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்குநர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம், என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு, சாட்சியிடம் படித்து காண்பிக்கப்பட்டு, விளக்கி கூறப்பட்டு, சாட்சியால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.**

SIVAPALANI

Digitally signed by SIVAPALANI
Date: 2026.02.17 15:45:13 +0530

**நா.சிவபழனி,**
**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**கந்தர்வகோட்டை.**